


பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி

# போரூர் ஏரி பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம்

## சென்னையில் நடந்தது

சென்னை, அக்.18-

சென்னையை அடுத்த போரூர் ஏரி பகுதியில் வீடு கட்டி வாழ்ந்த மக்களுக்கு உடனடியாக மாற்று இடம் வழங்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பசுமை தாயகம் அமைப்பு, சமூக பணி மற்றும் ஆய்வு மையம் சார்பில் மெமோரியல் ஹால் முன்பு நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு பசுமை தாயக அமைப்பின் மாநில செயலாளர் அருள் தலைமை தாங்கினார். துணை செயலாளர் சங்கர், சிரில் அலெக்சாண்டர், காஞ்சீபுரம் மாவட்ட அமைப்பாளர் என்.கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் காஞ்சீபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

முடிவில் பசுமை தாயகம் அமைப்பின் செயலாளர் அருள் நிருபர்களிடம் கூறுகையில், "போரூர் ஏரியில் வாழ்ந்த 12 ஆயிரம் குடும்பங்கள் வீடுகள் கடந்த 2006-ம் ஆண்டு இடித்து தள்ளப்பட்டது. இந்த பகுதி மக்களுக்கு அதிகாரிகள் சில மாற்று இடங்களை வழங்கினார்கள். அந்த இடங்கள் சுமார் 28 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நகரத்தை நம்பி வாழ்ந்து வந்த இந்த மக்கள் தற்போது புதிய இடத்தால் வேலைவாய்ப்பின்றி அவதிப்பட்டு வருகின்றனர். அரசு அளித்த மாற்று இடத்தில் எந்த வித அடிப்படை வசதியும் இல்லை. குழந்தைகளின் கல்வி கேள்விக்குறியாகி உள்ளது" என்றார்.